# தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை
# பதவி வெற்றிடங்கள்

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையில் நிலவும் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:-

**01. பதவிப் பெயர்:- உதவி சட்ட அலுவலர்**
**சேவை வகுதி:- "கனிஷ்ட முகாமையாளர்"**
**பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை:- 01**

## 01.1. தகைமைகள்

### 01.1.1. வெளிவாரி விண்ணப்பகாரர்கள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்துறை பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அத்துடன் உயர்நீதிமன்ற சட்டத்தரணியொருவராக இருத்தல்.

***அத்துடன்***

சட்டத்தரணியொருவராகவும் நொத்தாரிசு ஒருவராகவும் ஓராண்டு (01) கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

| | | |
|---|---|---|
| **சம்பள வகுதி:-** | - | **JM 1-1** |
| **சம்பள அளவுத்திட்டம்** | - | (ரூ.42,600 – 10 x 755 – 18 x 1,135 - ரூ.70,580/-)<br>(சம்பளம் தவிர, அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட படிகளும் செலுத்தப்படும்.) |
| **வயதெல்லை** | – | 22 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பகாரர்களுக்கு இந்த ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடைத்தாகாது. |

**வேறு:**

விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டுமென்பதுடன், நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு ஏற்ற உடல், உள தகுதிகளை உடையவராகவும், சிறந்த நன்னடத்தை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதியன்று தேவைப்படுத்தப்படும் தகைமைகளையும் எல்லா வகையிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.**

**விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான மொழிமூலம்:**

விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் ஆங்கில மொழியில் மாத்திரம் தமது விண்ணப்பங்களை அனுப்பிவைத்தல் வேண்டும் என்பதுடன், அதற்கு வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தை மாத்திரம் பயன்படுத்துதல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை:**

ஆட்சேர்ப்பு அதிகாரியினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு எழுத்துமூலப் பரீட்சையொன்றின் அத்துடன்/ அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

**நியமனத்தின் தன்மை:**

நிரந்தரமானது; ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கும் உரித்துடையது.

**விண்ணப்பக் கட்டணம்**

வெளிவாரி விண்ணப்பகாரர்கள் மாத்திரம் விண்ணப்பக் கட்டணமாக ரூ.500.00 தொகையை நாட்டின் எந்தவோர் இலங்கை வங்கிக் கிளையிலும் "தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை" என்ற பெயருக்கு இலங்கை வங்கியின் 1643 இலக்கக் கணக்கின் கீழ் பேணப்படும் கணக்கில் வைப்புச்செய்து, பணம் வைப்புச்செய்த பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தங்கள் வசம் வைத்துக்கொண்டு அதன் மூலப் பிரதியை (deposit slip) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். விண்ணப்பக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது.

உங்கள் விபரங்களை "A4" அளவிலான தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி சபையின் இணையத்தளத்திலுள்ள (www.nddcb.gov.lk) மாதிரிப் படிவத்தைப் பூரணப்படுத்தி (கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிட்டு) சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2021.08.13 ஆந் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் தவிசாளர், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை, இல.383, கோட்டே வீதி, இராஜகிரிய என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவு அஞ்சலில் அனுப்பிவைக்கவும். அரச கூட்டுத்தாபனங்களில் அல்லது நியதிச்சட்ட சபைகளில் பணிபுரியும் ஊழியர்கள், தாபன/ திணைக்களத் தலைவர் ஊடாக தமது விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைத்தல் வேண்டும்.

**ஒழுங்காகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள்/ காசு வைப்பிலிட்ட பத்திரத்தின் மூலப் பிரதி இணைக்கப்படாத விண்ணப்பங்கள்/ விண்ணப்பத்திற்கு காசு அல்லது காசு செலுத்திய உறுதிச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல்/ தாபனத் தலைவரின் கையொப்பம் அடங்காத உள்ளக விண்ணப்பங்களும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதி பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்களும் அறிவித்தலின்றியே நிராகரிக்கப்படுவதுடன், இப்பதவியைப் பெற்றுக்கொள்வதற்கு எவ்விதத்திலேனும் செல்வாக்குச் செலுத்துவது தகுதியீனமானதாக்கும்.**

**ஆட்சேர்ப்பு சம்பந்தமாக சபையினால் எடுக்கப்படும் முடிபு இறுதியானதாகும்.**

**தவிசாளர்,**
**தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை,**
**இல.383, கோட்டே வீதி,**
**இராஜகிரிய.**

பதிப்பிக்கும் திகதி: 2021.07.22